**செய்தி வெளியீடு எண் : 1433** **நாள் : 13.09.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை ஃபார்முலா 4 போட்டியினை நடத்தியதற்காக நன்றி தெரிவிக்கும் விழாவில் அரசு அலுவலர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (13.09.2024) சென்னை கலைவாணர் அரங்கில் கடந்த ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற சென்னை ஃபார்முலா 4 போட்டியினை சிறப்பாக நடத்திட உறுதுணையாய் பணியாற்றிய பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகர சென்னை காவல்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, போக்குவரத்து துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை பெருநகர் வளர்ச்சி கழகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு அரசு அலுவலர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,**

"அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்து கொள்கின்றேன்.

இந்த பந்தயம் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகம் இருந்தது. இப்பந்தயம் நடந்து அதுக்கு ஒரு நன்றி அறிவிப்பு நிகழ்ச்சி நடத்துவது ஒரு வித்யாசமான ஒரு அனுபவமாக இருக்கின்றது. தெற்கு ஆசியாவிலேயே முதன் முறையாக நடைபெற்ற சென்னை Formula 4 Racing Street Circuit இரவு நேர கார் பந்தயத்தை மிகப்பெரிய மாபெரும் வெற்றி பந்தயமாக்கிய, வெற்றி நிகழ்ச்சியாக ஆக்கிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை படைத்து வருகின்ற பல்வேறு சாதனைகளில் இந்த Formula 4 கார் ரேஸ் எப்போதுமே ஒரு தனித்துவமான ஒரு இடத்தை கண்டிப்பாக பிடித்திருக்கும். இந்த மாபெரும் வெற்றியை சாத்தியமாக்கியவர்கள் நீங்க மட்டும்தான். எனவே உங்களையெல்லாம் சந்தித்து நன்றி தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். இங்கே நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல் துறை, சுற்றுலாத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, தீயணைப்புத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், போக்குவரத்து துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த கிட்டத்தட்ட 1000 பேரை இங்கே நான் சந்திக்கின்ற வாய்ப்பை பெற்று இருக்கின்றேன். இந்த நன்றி தெரிவிப்பு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனை பேரையும் மீண்டும் வருக வருக என்று வரவேற்கின்றேன். சென்னையில் நடந்த Formula 4 ரேஸ் இன்றைக்கு உலகமே புகழ்ந்து கொண்டு இருக்கிறது, வியந்து பார்க்கின்றது. எல்லோரும் பாராட்டுகிறார்கள். வாழ்த்துகிறார்கள். அதுக்கு அனைத்து முழு காரணமும் இங்க வந்து இருக்க கூடிய நீங்கள் மட்டும் தான். நீங்க இல்லாம இந்த போட்டி நடந்து இருக்கவே நடந்து இருக்காது. அதுவும் இவ்வளவு சிறப்பா நடந்துட்டு இருக்க வாய்ப்பே கிடையாது.

மாண்புமிகு முதலமைச்சரோட உத்தரவின் பேரில் இந்த வருடம் மழைக்காலத்துக்கு முன்பு சென்ற வருடமே நடக்க வேண்டிய போட்டி. இந்த வருடம் மழைக்காலத்துக்கு முன்பு ஆகஸ்ட் மாதம் இறுதியில் நடத்தி முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டு

இருந்தார்கள். இதற்கான தேதிகள் முடிவு செய்யப்பட்ட நாள் முதல் இருந்தே நீங்கள் அனைவரும் இந்த போட்டியை உங்களுடைய தோளில் சுமந்து உழைக்க ஆரம்பித்தீர்கள். எந்த விதமான தயக்கமோ, களைப்போ இல்லாமல் Formula 4 பந்தயத்துக்கான பணிகளை நீங்கள் மிகச்சிறப்பாக செய்தீர்கள். சாலை போடுவது, துப்புரவு பணிகளை மேற்கொள்வது, போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவது, குடிநீர் வசதி ஏற்படுத்துவது, தடுப்புகள் அமைப்பது என்று உங்களுடைய பணிகளை நான் சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்த போட்டியை எவ்வளவோ பாதுகாப்பா நடத்துறீங்களோ அது தான் இந்த போட்டியோட உண்மையான வெற்றி, அப்படின்னு நம்மோட முதலமைச்சர் அவர்கள் மீண்டும் மீண்டும் நம்ம கிட்ட சொல்லி கொண்டே இருந்தார்கள். எந்த ஒரு சின்ன அசம்பாவிதமோ சிறு விபத்து கூட ஏற்பட கூடாது என்று முதலமைச்சருக்கு வாக்குறுதி கொடுத்துட்டு தான் இந்த போட்டியை நடத்த முடியும்னு நாங்க முடிவு செய்தோம். முதலமைச்சர் உங்களுக்கு கொடுத்த அந்த வாக்குறுதியை 100% காப்பாத்தி இருக்கோம் என்றால் அதுக்கு இங்க வந்துருக்க உங்களுடைய களப்பணி தான் காரணம். உங்களுடைய இந்த அர்ப்பணிப்பை நானும், நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு துறையும் என்றைக்கும் மறக்க மாட்டோம்.

நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு துறை அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் இங்கு இருக்கீறீர்கள் இந்த போட்டியை நடத்த வேண்டும் என்று நாங்கள் யோசிக்க ஆரம்பித்த நாள் முதல் போட்டி நடைபெற்ற நாள் வரை உங்களுடைய அந்த நேர்மையான திட்டமிடல் Planning and execution மிக சிறப்பாக இருந்தது. அதுதான் இந்த போட்டியின் வெற்றிக்கான அடித்தளம் என்றே சொல்லலாம். நம்முடைய துறையைச் சார்ந்த அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும், நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் மாநகராட்சி பணியாளர்கள் குறிப்பாக தூய்மை பணியாளர்கள் பற்றி சொல்லியே ஆகணும். அதிகாலையிலும் அடிக்கிற வெயிலிலும் வந்து நின்று பணிகளை செய்தார்கள்.

தூய்மைப் பணியாளர்கள் மெனக்கெட்டு அந்த ரேஸ் ட்ராக் முழுவதையும் இரண்டு நாட்களுக்கு தூய்மையாக வைத்திருந்தார்கள். அதே மாதிரி காவல் துறை நண்பருடைய உழைப்பை பற்றி நான் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். ஏனென்றால் இதில் பெரிய சவாலே Traffic Management தான். இந்த ரேஸ் மிக முக்கியமான பகுதியில் நடக்கின்றது. மக்கள் நடமாட்டம், வாகன நெரிசல் மிகுந்த பகுதியில் நடத்துகின்றோம். பல பேர் எதிர்பார்த்தார்கள். கண்டிப்பாக போக்குவரத்து நெரிசல் ஆகுமென்று. அதை புகைப்படம், வீடியோ எடுத்து அதை பெரிய செய்தி ஆக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தப் போட்டியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

சில வீடியோ ஷாட்ஸ் வந்தது. நீங்கள் கூடப் பார்த்திருப்பீர்கள். அதுல ஒரு பக்கம் ரேஸ் வந்து அழகா நடந்துட்டு இருந்தது, இன்னொரு பக்கம் ரோட்டுல அழகா போக்குவரத்து தடையின்றி இயங்கி கொண்டிருந்தது. அதை பார்த்தப் பிறகு விமர்சனம் செய்ய எதுவுமே இல்லை என்று பாராட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சிறிதாக விபத்து நடந்திருந்தால் கூட அதனை ஊதி பெரிதாக்க நிறைய பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இரண்டு நாய்க்குட்டி உள்ள ஓடி வந்துவிட்டது. அதனைக் கூட விமர்சனம் பண்ணினார்கள். நாய் ரேஸ் நடத்துகிறார்களா அல்லது கார் ரேஸ் நடத்துகிறார்களா என்று விமர்சித்தார்கள். இந்த F4 போட்டி நகரத்தில் நடத்துகிறோம். F1 ரேஸில் கூட நாய் குட்டி, முயல் குட்டி, மான் குட்டி எல்லாம் உள்ளே வந்துவிடும். இது கூட தெரியாத அறிவாளிகள் தான் நம்மை விமர்சனம் செய்துக் கொண்டிருந்தார்கள். அதனை எல்லாம் தவிடுபொடியாக்கி இவ்வளவு பெரிய வெற்றியை கொடுத்து உள்ளீர்கள்.

ரேஸ் நடந்த இரண்டு நாளிலும் எந்த பிரச்சனையும் இல்லாமல் நீங்கள் நடத்தி காட்டியிருக்கீறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த அத்தனை காவலர்களுக்கும் மீட்பு பணிக்காக தயார் நிலையில் இருந்த தீயணைப்பு வீரர்களுக்கும் எங்களுடைய அன்பையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் எல்லா நேரமும் களத்துல நின்று பொதுமக்களுக்கு, வீரர்களுக்கு என்ன தேவையானதைப் பார்த்து பார்த்து நீங்கள் அனைவருக்கும் உதவி செய்தீர்கள். அதைப் போல் சுற்றுலா வளர்ச்சி கழகத்தை சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் இங்கே இருக்கீறீர்கள் நியாயமா பார்த்தால் உங்களோட பணி தான் முதலில் ஆரம்பித்தது. உங்களோட உபசரிப்பா இருக்கட்டும். உங்களுடைய பகுதியில ஸ்டாண்டு அமைக்கிறதா இருக்கட்டும். எல்லா வகையிலும் இந்த போட்டி சிறப்பா நடத்த நீங்க அத்தனை பேரும் எங்களுக்கு துணை நின்று இருந்தீர்கள். அதே போல பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை ஊழியர்களுக்கும் என்னுடைய நன்றி. சர்வதேச தரத்தில் நடத்தற போட்டிக்கு எப்படி டிராக் தயார் செய்ய பட வேண்டுமோ அதே தான் நாம எதிர்பார்த்ததை விட சிறப்பா நீங்க செய்துக் காட்டி இருக்கீறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாத்தையும் விட மிக முக்கியம் எங்களுடைய செயலாளர் திரு.அதுல்யா மிஸ்ரா அவர்களுக்கும், உறுப்பினர் செயலர் திரு.மேகநாத ரெட்டி அவர்களுக்கும், அவர்கள் இரண்டு பேரும் இல்லை என்றால் எனக்கு இந்த ரேஸ் நடந்துருக்குமா ஒரு சந்தேகம் தான். கடந்த வருடம் நடத்தறோம் என்று ஒப்புக் கொண்டோம். அதற்கு பிறகு நடத்த முடியாமல் போய்விட்டது. அதுக்கு பிறகு இந்த வருடம் எப்படியேனும் நடத்தி காட்ட வேண்டும். பல்வேறு விமர்சனங்கள். இது தேவையா, இது நடத்தி காட்டனுமா என்று இது நடத்தாவிட்டாலும் விமர்சனம் செய்திருப்பார்கள். இருந்தாலும் நடத்தி காட்டுவோம். நம்மாலும் சென்னையில் இப்படி ஒரு இண்டர்நேஷனல் தரத்தில் ஒரு பந்தயம் நடத்த முடியும் என்று செய்து காட்டுவதற்கு முழுவதும் எனக்கு உறுதுணையாக இருந்த துறை செயலாளர் அவர்களுக்கும், உறுப்பினர் செயலர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்து கொள்கின்றேன். உங்களுடைய பணிகளை பார்த்த பிறகு இனி எப்படிப்பட்ட சர்வேதச விளையாட்டு போட்டிகளையும் சென்னையில் நடத்தலாம் என்கின்ற உறுதியான எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

இறுதியாக ஒரே ஒரு விஷயம் Formula 4 நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டோம். 10 நாள் ஆகிவட்டது. ஆனால் பணிகள் இன்னும் முடியவில்லை. எப்படி நாம் ஏற்பாடுகளை செய்தோமோ அதே மாதிரி சாலைகளை அந்த போட்டி நடந்த இடத்தை எல்லாம் பழைய நிலைமைக்கு நாம் கொண்டு வந்தாக வேண்டும். ஏற்கனவே அமைத்த தடுப்புகளை அப்புறப்படுத்துறது, சாலையை சரி செய்வது, அந்த பணிகளும் இப்போ தொடர்ச்சியா நடந்துக் கொண்டிருக்கிறது. உங்களை எல்லாம் பாராட்டுகின்ற அதே வேளையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் அந்த அப்புறப்படுத்துகின்ற பணிகளையும், நீங்கள் கவனமாக செய்து முடிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

மிக முக்கியமாக சென்னையினுடைய கார் பந்தய ரசிகர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஆரம்பத்தில் எத்தனை ஸ்டாண்டு போடுகிறோம் என்று சொன்ன போது கிட்டத்தட்ட 8000 ஆயிரம் பேர் அமர்வதற்கு வசதியாக இருக்கைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் 8000 பேர் வருவார்களா, எப்படி ticket sales பண்ண போகிறீர்கள் என்றுக் கேட்டேன். கண்டிப்பாக வருவார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் நினைத்ததை விட அதிகமான ticket sales நடைப்பெற்றது. யார் இந்த கார் ரேஸ் நடத்தக் கூடாது, எப்படியாவது நிப்பாட்டனும் அப்படின்னு நினைச்சாங்களோ அவங்க தான் இரண்டாவது நாள் எங்களுக்கு ticket கிடைக்காதா, எங்களுக்கு pass குடுங்க அப்படின்னு கேக்குற அளவுக்கு மிக சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தார்கள் என்று சொல்லலாம். 3 நாள் நடக்க வேண்டிய ரேஸ் இது, வெள்ளி, சனி, ஞாயிறு. ஆனால் முதலமைச்சர் சொல்லிவிட்டார். 3 நாட்கள் வேண்டாம் இரண்டு நாளில் நடத்தி

முடியுங்கள். பொது மக்களுக்கு எந்த விதமான இடையூறும் இருக்கக்கூடாது என்று சொன்னதால் இரண்டே நாளில் நடத்தி முடித்தோம். சனிக்கிழமை அன்று கார் ரேஸ், எவ்வளவு விறுவிறுப்பாக போகுமோ அதனை விட விறுவிறுப்பாக கார் ரேஸ் நடக்குமா நடக்காதா என்ற விறுவிறுப்பு நிறைய இருந்தது. முக்கியமா பாதுகாப்பு பணிகளுக்காக தான் அந்த சான்றிதழ்காக தான் நாங்கள் நீண்ட நேரம் காத்து இருந்தோம். அதன் பிறகு அந்த பாதுகாப்பு சான்றிதழ் வந்த பிறகு சனிக்கிழமை மாலையிலிருந்து ரேஸ் ஆரம்பித்து ஞாயிறு இரவு 10.30 மணி வரை மிக சிறப்பாக நடந்தது.

இதற்கு முழுவதுமாக ஒத்துழைப்புக் கொடுத்த சென்னை ரேஸிங் ரசிகர்களுக்கு மற்றும் தமிழ்நாட்டிலிருக்கும் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பலரும் ஒத்துழைப்புக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி விளம்பரதாரர்கள், அதே மாதிரி கார் ஓட்டிய வீரர், வீராங்கனைகள் அதனை ஒருங்கிணைத்தவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். சென்னை Formula 4 அப்படி என்ற வரலாற்றில் உங்களுடைய பெயர்களும் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று கூறிக் கொண்டு, உங்களுக்கு எல்லாம் மீண்டும் என்னுடைய அன்பையும் நன்றியையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.சங்கர் ஜிவால் இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்பு துறை இயக்குநர் திரு.ஆபாஷ் குமார் இ.கா.ப., பெருநகர சென்னை காவல்துறை ஆணையர் திரு.அருண் இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu